ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர் 472) Jul (2) / 2026

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவர்கள்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

பார்த்தசாரதி ஸ்ரீதரன்

உதவி: க்ருஷ்ணா ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)………..……………………………………3

2. பெரியாழ்வார் திருவாய்மொழி (வ்யாக்யானம்)……..……………………………..22

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீரங்கநாயகி ஸமேத ஶ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 437)

7-3-3. செங்கனி வாயின் திறத்ததாயும் *
செஞ்சுடர் நீள் முடி தாழ்ந்ததாயும் *
சங்கொடு சக்கரம் கண்டு உகந்தும் *
தாமரைக் கண்களுக்கு அற்றுத் தீர்ந்தும் **
திங்களும் நாளும் விழா அறாத *
தென் திருப்பேரெயில் வீற்றிருந்த *
நங்கள் பிரானுக்கு என் நெஞ்சம் தோழீ! *
நாணும் நிறையும் இழந்ததுவே

பொருள் – சிவந்த கனி போன்று இனிமையுடன் கூடியதும், கவர்ந்து இழுக்கவல்லதும் ஆகிய அவனுடைய திருவாயில் விருப்பம் கொண்டதாகவும்; சிவந்த ஒளி வீசும் நீளமான க்ரீடத்தில், அந்த மேன்மைக்கு ஏற்றபடி தாழ்ந்ததாகவும்; அப்படிப்பட்ட அவனுடைய பரத்வத்தை உணர்த்துகின்ற திவ்ய ஆயுதங்களைக் கண்டு மகிழ்ந்தும்; எல்லையற்ற இனிமையான தாமரை போன்ற திருக்கண்களுக்குத் தோற்றபடியாகவும் எனது நெஞ்சம் உள்ளது. ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு நாளும் இடைவிடாமல் உத்ஸவங்கள் நடந்தபடி உள்ள தென்திருப்பேரையில் நகரத்தில், தனது வேறுபாடு வெளிப்படும்படியாக எழுந்தருளியுள்ள நம்முடைய பிரானுக்கு, எனது நெஞ்சமானது நாணத்தையும் அடக்கத்தையும் இழந்தது.

அவதாரிகை - சேர்க்குமவளொருத்தியுமேயாக அல்லாத பங்களமடங்கலும் "நமக்கு நிலமன்று" என்று கைவாங்கிற்று; தோழியானவள் "இது நமக்குப் போராது காண், நெஞ்சை ஒருங்கப் பிடித்து தரித்திருக்க வேண்டாவோ?" என்ன; "அந்நெஞ்சுதான் இனிச் செய்வதென்? அவயவாதி சோபைகளிலே அகப்பட்டு அதுவும் தனக்குள்ளதடங்கலும் இழந்ததுகாண்" என்கிறாள்.

விளக்கம் – இவளை அவனுடன் சேர்க்கும் ஒருத்தி தவிர மற்ற அனைவரும் "இவளுடைய செயலானது நமக்கு அடக்க இயலாத ஒன்றாகும்" என்று பின்வாங்கினர். அப்போது இந்த ஒரு தோழி மட்டும், "என்ன செய்தாலும் பெண்களுக்கே உரிய நாணம், அடக்கம் போன்றவற்றை பார்த்துக் கொள்ளவேண்டாமோ?" என்றாள். இதற்கு நாயகி, "அந்த நெஞ்சத்தை இனி என்ன செய்வது? அவனுடைய அவயவங்களுடைய அழகில் மயங்கியபடி உள்ளது. இதன் விளைவாக அந்த நெஞ்சமும் தனக்குள்ள அடக்கம் போன்றவற்றை இழந்து நிற்கிறது", என்கிறாள்.

வ்யாக்யானம் – (செங்கனிவாயின் திறத்ததாயும், செஞ்சுடர் நீண்முடித் தாழ்ந்ததாயும், சங்கொடு சக்கரங்கண்டுகந்தும், தாமரைக்கண்களுக்கு அற்றுத் தீர்ந்தும்) "நெஞ்சு நாணும் நிறையும் இழந்ததுகாண்!" என்கிறாள். ஸௌபரி என்பான் ஒருத்தன் ஒரு ஸுக்ருதமடியாக ஐம்பது வடிவு கொண்டானிறே. அவ்வளவல்லவிறே இவள் கலந்த விஷயம் பண்ணவல்லது. அவன் வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமாப் போலேயாயிற்று இதுவும் அவயங்கள்தோறும் தனித்தனியகப்பட வல்லபடி. "ஏகதா பவதி த்ரிதா பவதி" என்கிறபடியே அநுபவியாநின்றால் பிறக்கும் நாநாபாவம், பிரிவிலே நெஞ்சுக்கு உண்டாகாநின்றது.

விளக்கம் – (செங்கனிவாயின் திறத்ததாயும், செஞ்சுடர் நீண்முடித் தாழ்ந்ததாயும், சங்கொடு சக்கரங்கண்டுகந்தும், தாமரைக்கண்களுக்கு அற்றுத் தீர்ந்தும்) - நெஞ்சமானது நாணத்தையும் அடக்கத்தையும் இழந்ததற்கான காரணம் கூறுகிறாள். ஆனால் ஒரு நெஞ்சமே இவ்விதம் பலவிதமான அவயவங்களை அனுபவிக்க இயலுமோ என்பதற்கு, பலவிதமான வடிவம் ஏற்பதால் ஒரு உதாரணம் மூலம் கூறுகிறார்; ஸௌபரி என்ற முனிவர் தனது நல்வினை காரணமாக ஐம்பது வடிவம் கொண்டார் அல்லவோ? அந்த அளவிற்காவது இவன் கலந்த இந்த விஷயம் செய்யவல்லது அல்லவோ? இவ்விதம் பல வடிவம்

கொள்ளவில்லை என்றாலும், அவனுடைய பல அவயவங்களிலும் ஈடுபடலாம் என்பதற்கு ஒரு உதாரணம் கூறுகிறார்; அவன் ஒவ்வொரு உருவத்திலும் நிறைந்து வசிப்பது போன்று இந்த நெஞ்சமானது ஒவ்வொரு அவயவத்திலும் தனித்தனியாக அகப்பட்டு நிற்கிறது. பல வடிவம் கொண்டதற்கு த்ருஷ்டாந்தம் கூறுகிறார்; சாந் - ஏகதா பவதி த்ரிதா பவதி - ஒரு சரீரம் ஆகிறான், மூன்று சரீரங்கள் ஆகிறான் - என்பதற்கு ஏற்ப அனுபவித்தபடி நின்றால் பிறக்கின்ற பலவிதமான சரீரங்கள் பிரியும்போது நெஞ்சத்தில் ஏற்படுகிறது. இவ்விதம் பல உருவங்கள் எடுப்பதற்கு இதே பாசுரத்திற்கான வ்யாக்யானத்தில் பின்னர் வருகின்ற "அம்ருத மதநத்தில்" என்று தொடங்கும் வாக்கியம் மூலம் மூன்றாவது உதாரணம் கூறுகிறார்.

வ்யாக்யானம் - (செங்கனி வாயின் திறத்ததாயும்) "பிரிந்து கடக்கவிருக்கிலென்? உன் கண்வட்டத்திலே கிடக்கிலென்? இது உன் சரக்கன்றோ?" என்று சொல்ல உபக்ரமித்து, தழுதழுத்து வருகிற திருவதரத்திலே யகப்பட்டபடி. அதிலும் அதரத்தில் பழுப்புக்குள் இழியமாட்டுகிறதில்லை. (வாயின் திறத்ததாயும்) அதுதான் ஒரு மஹாபாரதத்துக்குப் போருமாகாதே? (செஞ்சுடர் இத்யாதி) பிரிவை ப்ரஸங்கித்துப் பேர நின்றபோது, ஆதிராஜ்ய ஸூசகமாய் "உபயவிபூதி நாதன்" என்று தோற்றும்படியிருக்கிற திருவபிஷேகத்தைக் கண்டு தறைப்பட்டுக் காலைப் பிடித்தது. (சங்கொடு இத்யாதி) பிரிந்தால் விரோதியைப் போக்குகைக்குப் பரிகரமாய், வைத்த கண் மாறவொண்ணாத அழகையுடைய ஆழ்வார்களைக் கண்டுகந்தது. (தாமரைக்கண்களுக்கற்றுத் தீர்ந்தும்) "தவாஸ்மி" என்று சொல்லப்புக்கு மாட்டாதொழிந்தால், குறையும் தலைக்கட்டின திருக்கண்களுக்காயிற்று அநந்யார்ஹமாக எழுதிக் கொடுத்தது. பிரிகிறபோது நோக்கின நோக்கிலே, பிறர்க்காகாதபடி உஜ்ஜீவிக்கப் பண்ணினான். அம்ருதமதநத்தில் தான் எட்டு வடிவு கொண்டாப்போலே காணும் இதுவும் விஷயாதீநமாகப் பல வடிவு கொள்ளுகிறபடி. அவனுடைய ஐச்வர்யமடைய இதுக்கு உண்டாகக் கடவதிறே.

விளக்கம் – (செங்கனி வாயின் திறத்ததாயும்) - இவனுடைய வாயில் செந்நிறம் தோன்றுதல் என்பது வாய் திறந்து சொற்களைப் பேசும்போது அல்லவோ? இதனை அடுத்து கூறுகிறார். அவன் இவளிடம், "நான் உன்னை விட்டுப் பிரிந்து சற்று தூரம் சென்றால் என்ன? உனது கண்களுக்கு எப்போதும் இலக்காக உள்ளபடி அருகில் இருந்தால் என்ன? எப்படியானாலும் நான் உனக்கே உரியவன் அல்லவோ?", என்றான். இவ்விதம் அவன் தழுதழுத்த குரலில் கூறத் தொடங்க,

அப்படிப்பட்ட வாயில் இவள் அகப்பட்டான்; அதிலும் குறிப்பாக அதன் சிகப்பு நிறத்தில் அகப்பட்டு மீளாமல் உள்ளாள். (வாயின் திறத்ததாயும்) – அவனுடைய அவயவங்கள் ஒரு பெருங்கூட்டமாக, ஒரு மஹாபாரதத்திற்கு போர் போன்று இவளுக்கு உள்ளதே! (செஞ்சுடர் இத்யாதி) - இதுவரை சிவந்த வாயில் ஈடுபட்டபடி நின்றிருந்த இவளது மனமானது, இப்போது திருமுடியில் ஈடுபடுவது ஏன் என்பதற்கு விடை தருகிறார்; பிரிவைக் குறித்து உரைக்க முயன்றபோது, ஆதிராஜ்யத்தை வெளிப்படுத்துவதும், “உபய விபூதி நாதன்” என்பதை வெளிப்படுத்துவதும் ஆகிய திருவடியைக் கண்டு, அதில் மயங்கி நின்றாள். (சங்கொடு இத்யாதி) – பிரிந்தால், விரோதியை விலக்குவதற்கான உதவியாட்களாக, வைத்த கண் மாறாமல் பார்க்கவேண்டிய அழகுள்ள திவ்யமான ஆயுதங்களைக் கண்டு மகிழ்ந்தாள். (தாமரைக்கண்களுக்கற்றுத் தீர்ந்தும்) – “தவ அஸ்மி - உனக்கே நான் ஆகிறேன்” என்று கூறிய பின்னர் அகன்றால், அந்தக் குறையைப் போக்கவல்ல திருக்கண்களுக்கு, வேறு யாருக்கும் வசப்படாதபடி ஆனாள். அதாவது, தான் பிரிந்தபோது இவளைப் பார்த்து அந்தப் பார்வையின் மூலம், இவள் மற்றவர்களுக்கு என்று ஆகாதபடி, தனக்கே என்று வாழும்படிச் செய்தான். அமிர்தம் எடுப்பதற்காக ஸமுத்திரம் கடையப்பட்டபோது, தானே “தேவர்கள், ராக்ஷஸர்கள், வாஸுகீ, மந்தரம்” போன்றவர்களுக்கு அந்தர்யாமியாகவும், “கூர்மம், அந்தரிக்ஷம், உபேந்த்ரன்” என்பதாகவும் எட்டு ரூபங்கள் எடுத்து, அந்த மலையைச் சாயாமல் காப்பாற்றினான். இங்கு இவளுடைய நெஞ்சமும் இத்தகைய அவயவங்களில் ஈடுபட்டு, பல வடிவங்கள் கொள்கின்றன. அவனுடைய ஐச்வர்யம் அனைத்தும் இவளுடைய நெஞ்சத்திற்கும் உள்ளது போன்று ஆயிற்று.

வ்யாக்யானம் - (திங்களும் நாளும் இத்யாதி) உத்தேச்ய பூமியிலே நித்யோத்ஸவம் செல்லாநிற்க, அது இங்கே நம் கண்வட்டத்தே து:கத்துக்கு இலக்காயிருக்குமோ! மாஸத் திருநாளும் நித்யத்திருநாளுமோவாத. (வீற்றிருந்த நங்கள் பிரானுக்கு) இவ்விருப்பு நமக்கு ஆக்கிக் கொண்டிருக்கிற உபகாரகனுக்கு பரத்வம் நித்யமுக்தர்க்கு; வ்யூஹம் முக்த ப்ராயர்க்கு; விபவம் புண்ணியம் பண்ணினார்க்கு; இவ்விருப்பு பாபம் பண்ணின ஸம்ஸாரிகளுக்காகவிறே.

விளக்கம் – (திங்களும் நாளும் இத்யாதி) - நாம் சென்றடைய வேண்டிய பூமியாகிய திருப்பேரெயில் நகரத்தில், எப்போதும் உத்ஸவம் உண்டானபடியாக உள்ளபோது, எனது நெஞ்சமானது நமது கண்ணுக்கு இலக்கானபடி, துக்கத்தில் பிடியில் இலக்கானபடி இருக்குமோ? மாதத் திருநாள்களும், நாள் திருநாள்களும் நடந்தபடி உள்ள. (வீற்றிருந்த நங்கள் பிரானுக்கு) - இங்குள்ள தன்னுடைய இருப்பு என்பதை, நமக்கு என்று செய்து வைத்தபடி உள்ள உபகாரகனுக்கு. ஆனால் இங்கே உள்ள இருப்பானது நமக்காக என இருக்குமோ என்பதற்கு விடை தருகிறார்; பரத்வம் என்பது நித்யமுக்தர்களுக்காக ஆகும்; வ்யூஹமானது முக்தரைப் போன்றவர்களுக்காக ஆகும்; விபவம் என்பது புண்ணியம் செய்தவர்களுக்காக ஆகும்; இங்குள்ள இருப்பானது, பாபம் செய்த ஸம்ஸாரிகளுக்காக ஆகும் அல்லவோ?

வ்யாக்யானம் - (என்னெஞ்சம்) அவனுடைய உபகாரமும் ஸௌந்தர்யாதிகளும் வயிரவுருக்காகை. நெஞ்சினுடைய வன்மையறிதியிறே. நெஞ்சும் அவனும் ஒரு கோவையிலே அடைப்புண்டபடி. (நங்கள் பிரானுக்கு என்னெஞ்சம்) “ராகவோர்ஹதி வைதேஹீம்” என்னுமாப்போலே.

விளக்கம் – (என்னெஞ்சம்) - அவனுடைய உபகாரத்தன்மை மற்றும் அழகு போன்றவை வஜ்ரத்தையும் உருக்கவல்ல வஸ்து போன்று உள்ளது. அதாவது “நமக்குள்ள பெண்மையால் நாம் யாருக்கும் வசப்படமாட்டோம்” என்றுள்ள நெஞ்சத்தையும் உருக்குவதாக இந்த இரண்டு தன்மைகளும் உள்ளன. எனது நெஞ்சத்தின் கடினத்தை அறிவர் அல்லவோ? எனது நெஞ்சமும், அவனும் “சுதந்திரமாக உள்ள தன்மை” என்ற ஒரு தன்மையில் ஒன்றாயின. அவனையும், தனது நெஞ்சத்தையும், தனக்கு அடிமையாக உள்ளதாகக் கொள்வதால் “நங்கள் பிரான், என் நெஞ்சம்” என்றாள். அடுத்து, “என் நெஞ்சு” என்பதற்கு, “பகவானிடம் ஈடுபட்ட எனது நெஞ்சம்” என்பதாகப் பொருள் கொண்டு அருளிச்செய்கிறார்; ஸுந்தரகாண்டம் (16-5) - ராகவோர்ஹதி வைதேஹீம் - இராமனுக்குத் தகுந்த வைதேஹி - என்பது போன்று “எனக்கு ஏற்ற” மற்றும் “அவனுக்கு ஏற்ற” எனது நெஞ்சம். அதாவது அடியார்கள் விஷயத்தில் அவன் மிகவும் ப்ரியமாக இருப்பான்; எனது நெஞ்சமானது எனக்கு முன்பாக அவனிடம் சென்றதாக, பகவத் விஷயத்தில் ஈடுபாட்டுடன் உள்ளது; ஆகவே பரஸ்பரம் ஒப்புமை கூறப்பட்டது.

வ்யாக்யானம் - (தோழீ) நெஞ்சைத் திருத்திக் கலப்பிக்கப்பட்ட வருத்தம் அறிதியிறே. இப்போது நீயுங் கூட எதிர்த்தலையாம்படியிறே வாய்த்தது. (நாணும் நிறையும் இழந்ததுவே) இது இழவாதது உண்டோ? அரைக்ஷணம் அவன் பேர நின்று படுத்தின பாடெல்லாம் என்தான்! நான் தன்னையிழந்தேன், தாய்மார் தோழிமார்கள் என்னையிழந்தார்கள், நெஞ்சு நாணும் நிறையும் இழந்தது.

விளக்கம் – (தோழீ) – மேலே "நெஞ்சத்தின் வன்மை அறிதி" என்ற கூறியதன் கருத்தை உணர்த்துகிறார்; முதல் உறவு செய்தபோது வெட்கம் மற்றும் அடக்கம் ஆகியவற்றைத் தவிர்த்து பொருந்த விட்டவள் நீ அல்லவோ?அப்போது அவற்றைத் தவிர்ப்பதற்கு நீ செய்த பெருமுயற்சிகளை நீ அறிவாய் அல்லவோ? இப்போது நீயும் கூட இந்த நெஞ்சத்திற்கு அவசியம் இல்லை என்று, எதிர்த்தலையாக உள்ள நிலை ஏற்பட்டது. (நாணும் நிறையும் இழந்ததுவே) - இது இழக்காதது ஏதும் உண்டோ? நாணம், அடக்கம், நிறம் போன்ற பலவற்றையும் இழந்தது. அரைக்கணம் அவன் பிரிந்திருந்தபோது இந்த நெஞ்சம் என்னைப் படுத்திய விதங்கள்தான் என்னே! நான் என்னையே இழந்தேன், தாய்மார்களும் தோழிமார்களும் என்னை இழந்தார்கள், எனது நெஞ்சம் நாணத்தையும் அடக்கத்தையும் இழந்தது.

7-3-4. இழந்த எம்மாமைத் திறத்துப் போன *
என் நெஞ்சினாரும் அங்கே ஒழிந்தார் *
உழந்து இனி யாரைக் கொண்டு என் உசாகோ? *
ஓதக் கடல் ஒலி போல ** எங்கும்
எழுந்த நல் வேதத்து ஒலி நின்று ஓங்கு *
தென் திருப்பேரெயில் வீற்றிருந்த *
முழங்கு சங்கக் கையன் மாயத்து ஆழ்ந்தேன் *
அன்னையர்காள்! என்னை என் முனிந்தே?

பொருள் – முன்பே இழந்த எனது நிறத்தை மீட்டு எடுக்கச் சென்ற எனது நெஞ்சமும் அங்கேயே நின்று விட்டது. எனது அந்தரங்கமான நெஞ்சமானது என்னை விட்டுச் சென்ற பின்னர், தளர்ந்து நின்று, இந்த அனுபவ தாரையில் எந்த விருப்பமும் இல்லாதவர்களிடம், அவர்களுக்கு விருப்பமற்ற எந்தப் பொருள் குறித்து நான் பேசுவேன்? இவ்விதம் யாரிடமாவது பேசவேண்டும் என்றிருந்த நான், மிகுந்த அலைகள் கொண்டதான ஸமுத்ரத்தின் ஒலி போன்று அனைத்து

திசைகளிலும் ஓங்கி ஒலிக்கின்ற ஸாமவேத கோஷமானது, அனைத்து காலங்களிலும் ஒலித்தபடி உள்ள தென்திருப்பேரையில் நகரத்தில் வீற்றிருப்பவனும், அந்த வேத கோஷத்தின் எதிரொலி போன்று முழங்கும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தைக் கொண்டவனும் ஆகிய பகவானுடைய வியக்க வைக்கும் ஸௌலப்யம் போன்றவற்றை வெளிப்படுத்தும் லீலைகளில் மூழ்கி இருந்தேன். "மூப்பும் முறையும் உடையோம்" என்றிருக்கிற எனது தாய்மார்களே! வேறு துணை இன்றி தனித்து அவன் விஷயத்தில் ஈடுபட்டு நிற்கும் என்னை நீங்கள் கோபித்து என்ன பயன்?

அவதாரிகை – "ஏதேனுமொன்றைக் கொண்டு வருந்தியாகிலும் போதுபோக்காதே இங்ஙனே செய்யலாமோ?" என்று பொடிகிற தாய்மாரைக் குறித்து, "என்னெஞ்சம் அவனாலே அபஹ்ருதமாயிற்று. நான் எத்தைக் கொண்டு போதுபோக்குவது?", என்கிறாள்.

விளக்கம் – ஏதேனும் ஒன்றை மனதில் வைத்துக் கொண்டு, இவ்விதம் வருத்தம் அடைந்தபடியாவது பொழுதைக் கழிப்பதை விடுத்து, இவ்விதம் வேறு ஏதேனும் செய்யலாம் அல்லவோ?", என்று கோபித்துக் கொள்ளும் தாய்மார்களை நோக்கி, "எனது நெஞ்சமானது அவனால் அபகரிக்கப்பட்டது. இனி நான் எதனைக் கொண்டு எனது பொழுதைப் போக்குவது?", என்கிறாள்.

வ்யாக்யானம் - (இழந்த எம்மாமைத் திறத்துப் போன) நாணும் நிறையும் இழந்ததென்றவிடம் உபலக்ஷணமாகாதே; அநுபாஷணத்திலே நிறமிழந்தமையும் தோற்றச் சொல்லா நின்றாள். "அத்தலையிலுள்ளது நாம் ஸர்வஸ்வஹரணம் பண்ணுகைபோய், நமக்கு உள்ளத்திலேயொன்றைச் சிலர் கொடுபோகையாவதென்?" என்று அபிமாநித்து, "இப்போதே மீட்டுக் கொடு வருகிறேன்" என்று த்வரித்துப் போன நெஞ்சும் அங்கே படையற்றது.

விளக்கம் – (இழந்த எம்மாமைத் திறத்துப் போன) - மாமை என்பது நிறம். கடந்த பாசுரத்தில் நிறம் இழந்ததைக் கூறிய பின்னர் இங்கு மீண்டும் அதனையே ஏன் பின்மொழிய வேண்டும் என்பதற்கு விடை தருகிறாள்; "நெஞ்சமானது தனது நாணத்தையும் அடக்கத்தையும் இழந்தது" என்று கூறினால், இழந்த அனைத்தையும் சேர்த்துக் கூறியதாக இராது அல்லவோ? ஆகவே இவ்விதம்

மீண்டும் கூறுவதன் மூலம், நிறத்தை இழந்ததையும் வெளிப்படுத்துகிறாள். இவளுடைய நெஞ்சம் செய்தது என்ன என்பதைக் கூறுகிறாள்; “அவனிடமிருந்து நாம் முழுவதையும் நமக்கு உரியதாக்கிக் கொள்ள முயன்றோம். ஆனால் அதனைச் செய்யாமல், நமக்கு உள்ளதில் ஒன்றை அவனிடம் சிலர் கொண்டு செல்வதை எப்படி விடமுடியும்?”, என்று எண்ணிய எனது நெஞ்சமானது, அவனிடம் நான் இழந்த பலவற்றையும் “தன்னுடையது" என்று எண்ணியபடி, “இப்போதே சென்று நான் மீட்டுக் கொண்டு வருகிறேன்" என்று வேகமாக அவனிடம் சென்றது. ஆனால் அதுவும் அங்கேயே நின்றுவிட்டது.

வ்யாக்யானம் - (என்னெஞ்சினாரும் அங்கேயொழிந்தார்) அங்கே புக்காரையும் தம்படியாக்கிக் கொண்டார். “பிரியேன்” என்று சொன்னவரிறே இத்தலையைப் பிரிந்து நினையாதிருக்கிறார். (நெஞ்சினார்) அலைந்த பரிவட்டமுந் தாமுமாய் அணுக்கடித்துத் திரியா நின்றாராயிற்று. (நெஞ்சினார்) “ப்ரவேக்ஷ்யாமி ச வாஹிநீம்” என்று தூசித்தலையில் வ்யாபரிப்பேன் நான் என்றானின்றே ஸ்ரீவிபீஷணாழ்வான். (இழந்த இத்யாதி) நிறந் தொடக்கமான இழந்தவையடைய மீட்பதாகச் சொல்லிப் போன நெஞ்சினாரும் அங்கே கால்தாழ்ந்தார். வினைத்தலையிலே படையறுக்குமாப்போலே வரிசையுங் கொடுத்துத் தம்மோடு ஸாம்யா பத்தியுங் கொடுத்தார். வினைத்தலையில் படையறுக்கையாவது, யுத்த ஸமயத்திலே எதிர்த்தலையில் சேனையைத் தன்பக்கலிலே யாக்கிக் கொள்ளுகை. “ராஜாஹ்யேஷ விபீஷண:” என்னுமாப்போலே வரிசை பெற்றுத் திரியாநின்றார். ராவணன் முன்னே, அவன் சோற்றையுண்ட சுகஸாரணர்கள் விபீஷணாழ்வானை, “ராஜா” என்பானென்? என்னில், எழுத்து உருவழியாதே கிடந்தாலும், புள்ளி குத்தினால் அத்தைக் கழித்து மேலே போமாப்போலே, முடி கொடுக்குமவர் கையாலே வைக்கையாலே. என்றாலும், ராவணன் க்ரௌர்யத்தையறிந்து வைத்துக் கூசாதே இங்ஙன் சொல்லுவானென்? என்னில். “சித்ரம் குத்துமோ” என்றிருந்தார்கள். “நிலவரைக் கொண்டு வினை செய்யலாம்” தரங் கொடுப்பரிறே.

விளக்கம் – (என்னெஞ்சினாரும் அங்கேயொழிந்தார்) - அங்கே சென்ற எனது மனதையும் அங்கு முன்பே சென்ற நெஞ்சமானது, “தன்னுடையது” என்று செய்து கொண்டது. “இவளை விட்டுப் பிரியமாட்டேன்” என்று கூறிய இவளுடைய நெஞ்சமும் கூட இப்போது இவளை நினைக்காமல் உள்ளது. (நெஞ்சினார்) - அலைந்த பரிவட்டமும் தானுமாக இவளுடைய நெஞ்சமானது அங்கேயே அவனுக்கு அந்தரங்கமாகி நின்றது. இவளுடைய நெஞ்சம் அங்கு அந்தரங்கமாக நின்றதற்கு ப்ரமாணம் யுத்தகாண்டம் (19-23) - ப்ரவேக்ஷ்யாமி ச வாஹிநீம் - படையின் முதல் இடத்தில் நான் நிற்பேன் - என்று ஸ்ரீவிபீஷணாழ்வான் கூறியது

ஆகும். (இழந்த இத்யாதி) – அடுத்து “திறம்” என்பதற்கு “கூட்டம்” என்பதாகப் பொருள் கொண்டு அருளிச்செய்கிறார்; எனது நிறம் போன்ற அனைத்தையும் நான் இழந்தேன்; அவற்றை முழுவதுமாக மீட்பதாகக் கூறி எனது நெஞ்சம் அங்கு சென்றது; அத்தகைய நெஞ்சமும் அங்கேயே நிலைத்தது. “அங்கே புக்காரையும் தம்படியாக்கிக் கொண்டார்” என்பதற்கு, “உனது கார்யம் நிறைவேற்றச் சென்ற உனது நெஞ்சமானது அவன் சொற்களைக் கேட்டு அடங்குவதற்கு என்ன காரணம்?”, என்று கேட்கலாம்; இதற்கு விடை தருகிறாள்; போர்முனையில் எதிரிகளின் படையைத் தன் வசமாக்குவது போன்று தனது வரிசையையும் அவன் எனது நெஞ்சத்திற்கு அளித்து, தன்னுடன் “என்னை விட்டுப் பிரிதல்” என்பதான ஒப்புமையையும் அளித்தான். இலங்கையை அழிப்பதற்கு ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு முடிசூட்டியதை இதற்கு உதாரணம் காண்பிக்கிறார்; யுத்தகாண்டம் (28-27) - ராஜாஹ்யேஷ விபீஷண: - இந்த விபீஷணன் அரசன் அல்லவோ - என்பது போன்று, எனது நெஞ்சமும் அவனுடன் ஒப்புமை வரிசையில் நின்றது. ஆனால் இராவணனுக்கு முன்னரே விபீஷணனை “அரசன்” என்று கூறலாமோ என்பதற்கு விடை தருகிறார்; அதாவது இராவணன் இறப்பதற்கு முன்னரே, அவனுடைய சோற்றை உண்டு இன்பத்தில் இருந்த அவனுடைய தொண்டர்கள், விபீஷணனை “ராஜா” என்று ஏன் கூறினர்? இதற்கு விடை தருகிறார்; ஓலையில் தெளிவான எழுத்து இருந்தாலும் அதன் மேல் ஒரு புள்ளி வைத்தால் அது எப்படிச் செல்லாததாகி விடுமோ, அது போன்று ஆசார்யனின் திருக்கரங்கள் நம் மீது படும்போது, நம்மிடமுள்ள கர்மங்களும் அகங்காரமும் பகவானால் தள்ளுபடி செய்யப்பட்டு, நாம் உய்வடைவது போன்று, இங்கு இராமனால் அளிக்கப்பட்ட க்ரீடம் என்பதால், “ராஜா” என்றனர். இவ்விதம் இராவண் முன்பாக உரைத்தால், அவன் துன்புறுத்தமாட்டானோ என்பதற்கு விடை தருகிறார்; அதாவது இராவணனுடைய க்ரூரமான தன்மையை அறிந்துள்ளபோதிலும், அதனை எண்ணி அஞ்சாமல் இவ்விதம் கூறலாமோ? இதற்கு விடை, “ஒரு ஓவியத்தில் வரையப்பட்ட ஆயுதம் தாக்குமோ?”, என்று இருந்தனர்; தகுதியானவர்களைக் கொண்டு தக்க செயலாற்றலாம் என்று எண்ணுவதால் அதற்கான தகுதியைத் தருவார்கள் அல்லவோ?

வ்யாக்யானம் - (என்னெஞ்சினாருமங்கே யொழிந்தார்) நிறம் மீட்கப் போனாரும் நிறங்கொடு போனாரோடொத்தார். இத்தலையில் வெறுமை கண்டு போனதுவும் பௌஷ்கல்யங் கண்டு போனவனோடு ஒத்தது. போவார்போவாரெல்லாம் இத்தலைக்குக் காரியமாகக் காணும் போம்போது சொல்லிப்போவது! அவன்தானே

"இத்தலையூற்றிருக்க வேணும்" என்று போனானானான்; இது இத்தலையில் வெறுமை கண்டு, நோக்குகைக்காகப் போயிற்று. நாம்தாம் அவர்களை வெறுக்கிறதென், "நோபஜநம் ஸ்மரந்" என்று புக்கார் மீளாத தேசமான பின்பு?

விளக்கம் – (என் நெஞ்சினாரும் அங்கே ஒழிந்தார்) - எனது நிறத்தை மீட்டுக் கொண்டு வருகிறேன் என்று சென்ற நெஞ்சமும், அந்த நிறத்தை அபகரித்துச் சென்றவருடன் சேர்ந்து ஒப்புமை அடைந்தது. இவள் விஷயத்தில் வெறுமை உள்ளதைக் கண்டு அதனை சீராக்குவதற்காக சென்ற நெஞ்சமும், அந்த ஊரின் நிறைவைக் கண்டு, நிறத்தை அபகரித்துச் சென்றவனுடன் ஒப்பானது. இதுவரை பாராமல் இருந்தவர்களையும் கூட, இவளுக்காகச் சென்றதாகக் கூறலாமோ என்பதற்கு விடை தருகிறார். இங்கிருந்து அங்கு செல்லும் ஒவ்வொருவரும் இவள் விஷயத்திற்காகவே செல்வதாக அல்லவோ உரைத்துச் செல்கிறார்கள்! அவனும் கூட இங்கிருந்து செல்லும்போது, "இவள் மீது காதல் மிகுதியாக இருத்தல் வேண்டும்" என்று அல்லவோ கூறிச் சென்றான்! இப்படி உள்ளபோது, இப்போது சென்ற நெஞ்சமானது இவளுடைய வெறுமையைக் கண்டு, இதனைப் போக்கவே அங்கு சென்றது. இப்படி உள்ளபோது, நாம் அதனை ஏன் வெறுக்க வேண்டும்? அதாவது, அந்த இடமானது உபநிஷத்தில் - நோபஜநம் ஸ்மரந் - அதன் பின்னர் நினைப்பதில்லை - என்பதாகக் கூறப்படும் இடம் போன்று உள்ளபோது, நாம் ஏன் வெறுக்க வேண்டும்?

வ்யாக்யானம் - (அங்கேயொழிந்தார்) "கடலுக்குக் குறை நிரப்ப வேணும்" என்று திரியாநின்றார். (உழந்து இத்யாதி) பண்டு நெஞ்சிழந்தவர்களும் வருந்தி தரித்துச் சிலரோடே வ்ருத்த கீர்த்தநம் பண்ணியிருந்திலர்களோ? நீயும் அப்படியே வருந்தியாகிலும் சிலரோடே காலக்ஷேபம் பண்ண வேண்டாவோ? என்ன; (இனி உழந்து ஆரைக் கொண்டு என் உசாகோ) உழந்து - வருந்தி. (இனி) என்னெஞ்சை இழந்த பின்பு. இனி து:க்கப்பட்டு ஆரோடேகூட எத்தைச் சொல்லி நான் காலம் போக்குவது? லங்கையிலே இருந்தவளுக்கு ஒருவனாதல் ஒருவன் குடியாதல் உண்டு; அதுவுமில்லையே எனக்கு!

விளக்கம் - (அங்கேயொழிந்தார்) - எனது நெஞ்சமானது அங்கு சென்ற பின்னர், அங்குள்ள ஸர்வேச்வரனைக் குறித்து, "கடலுக்கு நீரில் குறைவு ஏற்பட்டது. அதனை நிரப்ப வேண்டும்" என்று எண்ணியபடி அங்கேயே தங்கியது. (உழந்து

இத்யாதி) – இவளுடைய நிலையைக் குறித்துக் கேட்ட தாய்மார்கள், "அதாவது முன்பு ஸீதையானவள் த்ரிஜடையுடன் உரையாடி தனது காலத்தைக் கழித்தாள். அவர்கள் வருத்தம் அடைந்தாலும், உயிர் தரித்து, ஒரு சிலருடன் அவனுடைய செயல்கள் குறித்துப் பேசியபடி உள்ளனர். நீயும் இவ்விதம் வருந்தினாலும், சிலருடன் சேர்ந்து காலம் கழிக்கவேண்டுமா?", என்றனர். இதற்கு விடை தருகிறாள். (இனி உழந்து ஆரைக் கொண்டு என் உசாகோ) - உழந்து என்றால் வருந்தி; (இனி) - எனது நெஞ்சத்தை இழந்த பின்னர், இனி துக்கம் அடைந்து யாருடன் சேர்ந்து எதனைப் பேசி எனது காலத்தை நான் கழிப்பேன்? இலங்கையில் சிறையிருந்தவளுக்கு ஸ்ரீவிபீஷணாழ்வான் மற்றும் த்ரிஜடை போன்றவர்கள் இருந்தனர்; எனக்கு அது போன்று இங்கு யாரும் இல்லையே!

வ்யாக்யானம் - "ஜ்யேஷ்ட்டா கந்யாநலாநாம் விபீஷண ஸுதா" இங்கேயிருந்தே அங்குத்தைக்கு ஆவாளொருத்தி காண்! (கபே) ஓரோ அவஸ்த்தைகளிலே நீ உதவுமாப்போலே காண் இவளுந் ஓரோ தசைகளிலேயுதவ வல்லபடி. பல சொல்லியென்? உன்னோடொப்பா ளொருத்தி. (ஆரைக் கொண்டென்னுசாகோ) தேஹாத்மாபிமாநிகளான ஸம்ஸாரிகளைக் கொண்டு போதுபோக்கவோ? "ஈச்வரோஹம்" என்றிருக்கிற ப்ரஹ்மேசாநாதிகளைக் கொண்டு போதுபோக்கவோ? பகவதநுபவத்திலே அநந்யபரராயிருக்கிற நித்யஸூரிகளைக் கொண்டு போதுபோக்கவோ? இத்தலையை உரிசூறை கொண்டு போனவனைக் கொண்டு போதுபோக்கவோ? ஆரைக் கொண்டு எத்தையுசாவுவது? (என்னுசாகோ) "ஸமா த்வாதச தத்ராஹம்" என்று சொல்லலாமிறே யவளுக்கு. அப்படியே நமக்கும் ஏதேனுமுண்டோ? கலவியில் அபர்யாப்தியிருக்கிறபடி. (ஆரைக் கொண்டு) நெஞ்சு போலே நமக்குப் பாங்காயிருப்பாருண்டோ?

விளக்கம் – இவ்விதம் ஸீதை இருந்தாளோ என்பதற்கு ப்ரமாணம் கூறுகிறார்; ஸுந்தரகாண்டம் (37- 11) - ஜ்யேஷ்ட்டா கந்யாநலாநாம் விபீஷண ஸுதா - என்று அனுமனைப் பார்த்து ஸீதை உரைத்தவற்றைக் கூறுகிறார். இந்த இலங்கையில் இருந்தபடியே இராமனுக்கு ஆவாள் ஒருத்தியைக் காண்பாயாக. (கபே) - ஒவ்வொரு நிலையிலும் நீ ஸீதைக்கு உதவியது போன்று இவளும் எனது ஒவ்வொரு நிலையிலும் உதவவல்லவளே ஆகிறாள். பலவும் கூறி என்ன பயன்? உன் போன்று ஒருத்தி கிடைப்பாளோ? (ஆரைக் கொண்டு என் உசாகோ) - சரீரத்தையே ஆத்மா என்று எண்ணுபவர்கள் முலமோ நான் எனது பொழுதைப் போக்க இயலும்? அல்லது, "ஈச்வரோஹம் - நானே ஈச்வரன்" என்று

கூறிக்கொள்ளும் நான்முகன் ஈசன் போன்றவர்கள் மூலம் பொழுது போக்க இயலுமோ? அல்லது பகவத் அனுபவத்தில் மட்டுமே தங்கள் சிந்தனையை நிறுத்தி வேறு எதிலும் செல்லாத நித்யஸூரிகள் மூலம் பொழுது போக்கவோ? இப்படியாக எனது நிலையைச் செய்துவிட்டுச் சென்றவன் மூலம் பொழுது போக்க இயலுமோ? யாரைக் கொண்டு அவர்களுடன் என்ன பேசுவது? (என் உசாகோ) அயோத்யாகாண்டத்தில் - ஸமா த்வாதச தத்ராஹம் - நான் அங்கு பன்னிரண்டு ஆண்டுகள் இன்பமாக இருந்தேன் - என்று கூறலாம்படி ஸீதைக்கு நிலை இருந்தது; என் விஷயத்தில் அவ்விதம் ஏதும் உள்ளதா? இவ்விதம் கூறும்படியாக இவளுக்கு அவனுடைய சேர்க்கை ஏற்படவில்லையோ என்றால், "அந்தச் சேர்க்கையில் நிறைவு ஏற்படவில்லை" என்கிறாள். (ஆரைக் கொண்டு) - எனது நெஞ்சம் போன்று நமக்குப் பாங்காக இருப்பார்கள் வேறு யாரேனும் இருப்பார்களோ?

வ்யாக்யானம் - ஆனால், செய்ய வடுப்பதென்? என்னில், (ஓதக்கடல் இத்யாதி) அங்குத்தையது இங்கே நடையாடா நின்ற பின்பு, நாமும் அங்கே போய்ப்புகுமத்தனை. ஓதங் கிளர்ந்த கடல் போலேயிருந்துள்ள வேதகோஷமானது எங்கும் பரம்பாநின்ற தென்திருப்பேரையில் வீற்றிருந்த. (நல்வேதம்) "வேதாநாம் ஸாமவேதோஸ்மி" என்கிற ஸாம த்வநியாய்க் கிடக்குமத்தனை, பார்த்த பார்த்தவிடமெங்கும்; அவ்விருப்பைக் கண்டு முக்தர் ஸாமகாநம் பண்ணி ப்ரீதிக்குப் போக்குவிடுமாப்போலே. (முழங்கு சங்கக் கையன்) வேதத்வநியானது ஸ்ரீபாஞ்சஜந்யத்தைக் கிட்டி ப்ரதித்வநியெழா நிற்கும்.

விளக்கம் – சரி, இனி என்ன செய்யபோகிறாய் என்பதற்கு விடை தருகிறாள்; (ஓதக்கடல் இத்யாதி) - ஓதக்கடல் என்றால் அலைகள் ஒங்கி வீசியபடி உள்ள கடல், அலை எழுந்தபடி உள்ள கடல், ஸம்ருத்தமான கடல். பரமபதத்தில் உள்ள ஸாம வேத கோஷமானது இந்தத் திருப்பேரெயில் நகரத்தில் ஒலித்தபடி உள்ளபோது, நாமும் அங்கு சென்று சேர்வோம். அதாவது அலை வீசியெறியும் கடல் போன்றுள்ள ஸாம வேதகோஷமானது எங்கும் நிறைந்தபடி உள்ள திருப்பேரெயிலில் வீற்றிருந்த. (நல்வேதம்) - கீதை (10-22) - வேதாநாம் ஸாமவேதோஸ்மி – வேதங்களில் நான் ஸாமவேதம் ஆகிறேன் - என்று ஸாமவேத கோஷமாகவே காண்கின்ற இடங்களிலெல்லாம் உள்ளது. பரமபதத்தில் இவன் வீற்றிருந்த நிலையைக் கண்டு அங்குள்ல முக்தர்கள் ஸாமகானம் செய்து ப்ரீதியை வெளிப்படுத்துவது போன்று இங்கும் உள்ளது. (முழங்கு சங்கக் கையன்) - வேத

கோஷமானது ஸ்ரீபாஞ்சஜந்யத்தை அண்டி நின்று, அதிலிருந்து கிளம்பும் முழக்கத்தை எதிரொலிப்பதாக இருக்கும்.

வ்யாக்யானம் - (மாயத்தாழ்ந்தேன்) அவனுடைய ஸ்மித வீக்ஷணாதிகளிலே மீளவொண்ணாதபடி யகப்பட்டேன். (அன்னையர்காளென்னையென் முனிந்தே) ப்ராப்தி யுண்டென்னாச் சீறுமத்தனையோ? சீற்றத்துக்கெதிர்த்தலையும் வேண்டாவோ? தர்மியுண்டாய் முனிய வேணுமே! (மாயத்தாழ்ந்தேன் என்னையென் முனிந்தே) ஸ்வாதீநரையன்றோ முனிந்தால் ப்ரயோஜநமுள்ளது.

விளக்கம் – (மாயத்தாழ்ந்தேன்) - அவனுடைய புன்னகை மற்றும் கடைக்கண் பார்வை போன்றவற்றில், அவற்றிலிருந்து மீள முடியாதபடி அகப்பட்டேன். (அன்னையர்காள் என்னையென் முனிந்தே) - எனது தாய்மார்கள் என்ற ஸம்பந்தம் உள்ளதை மட்டுமே எண்ணியபடி, அந்த உரிமையில் என் மீது கோபம் கொண்டு என்ன நடக்கப்போகிறது? அதாவது உறவுமுறை மற்றும் வயதான நிலை ஆகியவற்றை என்ணிக் கோபம் கொண்டால் மட்டுமே போதுமானதா? அந்தக் கோபத்திற்கான இலக்காக ஒருவர் வேன்டுமா? (மாயத்தாழ்ந்தேன் என்னையென் முனிந்தே) - சுய நினைவு உள்ளவர்களிடம் கோபம் காண்பித்தால் அல்லவோ பயன் இருக்கும்!

7-3-5. முனிந்து சகடம் உதைத்து * மாயப்
பேய் முலை உண்டு மருது இடை போய் *
கனிந்த விளவுக்குக் கன்று எறிந்த *
கண்ண பிரானுக்கு என் பெண்மை தோற்றேன் **
முனிந்து இனி என் செய்தீர்? அன்னைமீர்காள்! *
முன்னி அவன் வந்து வீற்றிருந்த *
கனிந்த பொழில் திருப்பேரெயிற்கே *
காலம் பெற என்னைக் காட்டுமினே

பொருள் – தாய்ப்பால் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தால் சீற்றம் கொண்டு, அதன் காரணமாகத் தனது திருவடிகளை நிமிர்த்து, சகடாஸுரனை உதைத்து; தாய் வடிவம் கொண்டபடி வந்த பேயான பூதனை முடியும்படியாக அவளிடம் தாய்ப்பால் பருகி; இரண்டாக நிற்கும் மருதமரங்கள் நடுவில் சென்று; பழுத்த விளா மரத்தில் கன்றாக வந்த அஸுரனை அடித்து; இப்படியாகப் பலவற்றையும் செய்த க்ருஷ்ணனாகிய பெரும் உதவிகள் செய்தபடி உள்ளவனுக்கு

எனது பெண்மைத்தன்மையை நான் இழந்தேன். தாய்மார்களே! எனது இந்த நிலையை நீங்கள் அறிந்துள்ளபோதிலும், எனது விருப்பத்திற்கு ஏற்ப நீங்கள் நடக்கவில்லை, உங்கள் விருப்பமும் நிறைவேறவில்லை! என்ன காரியம் செய்கிறீர்கள்? எனது விருப்பம் என்னவென்று நீங்கள் கேளுங்கள்; அவன் முன்னரே வந்து வீற்றிருக்கும், பழங்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்துள்ள திருப்பேரெயில் என்ற திவ்யதேசத்திற்குச் செல்வதற்கு ஏற்ற காலம் என்பது போன்ற முறைப்படி காத்திருக்க இயலாத என்னை, மேலும் காலதாமதம் செய்யாமல் கொண்டு சென்று காண்பீர்களாக.

அவதாரிகை – "இங்ஙனே விரைகை ஸ்த்ரீத்வத்துக்குப் போராதுகாண்" என்று தாய்மார் அலைக்க, "அதுவும் பண்டே போயிற்று; ப்ரயோஜநமில்லாத தசையிலே கொடுபோக நில்லாதே, என்னை ஏற்கவே கொடு போய்த் தென்திருப்பேரெயிலிலே விடுங்கோள்" என்கிறாள். முனிகிறதுதான் எனக்கு ஹிதம் பார்த்தேயானால் என் ஹிதத்திலே ப்ரவர்த்திக்கப் பாருங்கோள்.

விளக்கம் – தாய்மார்கள் இவளை நோக்கி, "இப்படி நீ விரைவு கொள்ளுதல் என்பது உனது பெண்மைத்தன்மைக்கு ஏற்புடையது அல்ல", என்றனர். இதற்கு இவள், "அத்தகைய எனது பெண்மைத்தன்மை முன்பே போயிற்று. எந்தவிதமான ஒரு ப்ரயோஜனமும் இல்லாத நிலையில் நான் உள்ளபோது என்னைக் கொண்டு சென்று தென்திருப்பேரெயிலில் சேர்க்க நீங்கள் முயற்சிக்காமல், அதற்கு முன்பாகவே கொண்டு சேர்ப்பீர்களாக. என்னைக் கோபித்தல் என்பது எனது நலத்தில் அக்கறை கொண்டே ஆகும் என்றால், எனது நிலத்தில் உண்மையாகவே ஈடுபட முயல்வீர்களாக", என்கிறாள்.

வ்யாக்யானம் - (முனிந்து இத்யாதி) என்னினைவு தன்னை புத்தி பண்ணுங்கோள்; அவன் முனிவிலே யகப்பட்ட நான் இனியுங்கள் முனிவுக்கு மீளுவனோ? ஹிதமுமாய் ப்ரியமுமான முனிவிலே யகப்பட்ட நான் அஹிதமுமாய் அப்ரியமுமான உங்கள் முனிவுக்கு மீளுவனோ? (முனிந்து சகடமுதைத்து) முலை வரவு தாழ்த்ததென்று சீறி நீட்டின திருவடிகளுக்கு இலக்காய்ப் பொடிபட்டதாயிற்று சகடம். "ஸ்தந்யார்த்தீ ப்ரருரோதஹ"இறே.

விளக்கம் - (முனிந்து இத்யாதி) - எனது நினைவுகளையும் எண்ணங்களையும் சற்றே சிந்தித்துப் பார்ப்பீர்களாக. அவன் குழந்தையாக இருந்தபோதே காண்பித்த சீற்றம் முதலானவற்றில் அகப்பட்ட நான், உங்களுடைய கோபத்தின் காரணமாக மீண்டு வருவேனோ? இதற்குத் தாய்மார்கள், "ஏதேனும் ஒரு கோபத்தில் அகப்பட்டாய் என்றால், எங்கள் கோபத்திலும் அகப்படலாம் அல்லவோ?", என்றனர்; இதற்கு விடை தருகிறாள்; நன்மையும் ப்ரியமும் கலந்து நிற்கும் அவனுடைய அத்தகைய செயலில் அகப்பட்ட நான், நன்மை அற்றதும் ப்ரியம் அற்றதும் ஆகிய உங்கள் கோபத்தால் மீள்வேனோ? அதாவது அவனுடைய கோபமானது அடியார்களுடைய விரோதிகளை விலக்குவதற்கு ஏற்றதாகவும், அடியார்கள் மீது கொள்ளும் வாத்ஸல்யத்திற்கு ஏற்றதாகவும் உள்ளதால் நன்மை மற்றும் ப்ரியம் கலந்ததாகவே இருக்கும்; ஆனால் உங்களுடைய கோபமானது, "எஜமானன் உள்ள இடத்திற்கு அவன் அடிமை செல்லுதல் என்பதே ஸ்வரூபமாக உள்ளபோது, அதனைத் தகாத செயல்" என்று கூறுவதாலும், இது எனக்கு விருப்பம் அற்றதாக உள்ளதாகவும், நன்மை அற்றதாகவும் ப்ரியம் இன்றியும் உள்ளதாகும். (முனிந்து சகடமுதைத்து) - தாய்ப்பால் கிட்டுவதற்குக் காலதாமதம் உண்டானதைப் பொறுக்க முடியாமல் சீற்றம் கொண்டு நீட்டிய திருவடிகளுக்கு இலக்காக இருந்த சக்கரமானது பொடிப்பொடியானது; இதற்கு ப்ரமாணம் ஸ்ரீவிபு. (5-6-1) - ஸ்தந்யார்த்தீ ப்ரருரோதஹ - தாய்ப்பாலை வேண்டி அழுதான் – என்பதாகும்.

வ்யாக்யானம் - (மாயப்பேய் முலையுண்டு) "முலையை நினைத்துச் சீறினான்" என்று முலை கொடுக்கத் தாய் வடிவு கொண்டு வந்த வஞ்சநையான பேய்ச்சியை முடித்து. (மருதிடை போய்) முலையுண்டால் தவழுமத்தனையிறே. புறம்பு நின்றும் வந்து நலிகையன்றிக்கே, நின்றவிடத்தே நின்று தப்பாமே கொல்ல நினைத்த யமளார்ஜுநங்களைப் பொடிபடுத்தி. (கனிந்த இத்யாதி) அஸுராவேசத்தாலே ஒன்று கனிந்த விளவாய், ஒன்று கன்றாய் நின்றது; அதிலே யொன்றையிட்டு ஒன்றையெறிந்து இரண்டையும் முடித்த.

விளக்கம் – (மாயப்பேய் முலையுண்டு) – "ஸ்தனங்களைத் தாய்ப்பாலை எண்ணியவனாக நின்று சீறினான்" என்று தாய்ப்பால் தர வந்த வஞ்சகம் நிறைந்த பேயாகிய பூதனையை முடித்து. (மருதிடை போய்) - தாய்ப்பால் பருகிய பின்னர் ஒரு குழந்தையானது தவழும் அல்லவோ? வெளியிலிருந்து வந்து இவனைத் துன்புறுத்துவது என்பது மட்டுமே அல்லாமல், நின்ற இடத்திலேயே நின்று

தவறாமல் கொல்ல எண்ணிய மருதமரங்கள் இரண்டையும் பொடியாக்கி. (கனிந்த இத்யாதி) - அஸுர இயல்பு உள்ளே புகுந்ததால் ஒன்று பழுத்த விளாம்பழமாகவும், ஒன்று கன்றாகவும் நின்றது. அவற்றில் ஒன்றை மற்றொன்றின் மீது எறிந்து இரண்டையும் முடித்த.

வ்யாக்யானம் - (கண்ணபிரானுக்கென் பெண்மை தோற்றேன்) அழியுமவற்றையும் அழித்தான், அழியாதவற்றையும் அழித்தான். வன்மையாலே யழித்தான் அவற்றை; மென்மையாலே யழித்தான் இவற்றை. (பிரானுக்கு) அவற்றின் கையில் தான் அகப்படாதே தப்பித் தன்னைத் தந்தவுபகாரத்துக்கு எழுதிக் கொடுக்கிறாள் காணும். சேஷியான தன்னையுண்டாக்கி, என்னை சேஷத்வத்தினுடைய எல்லையிலே நிறுத்தினான். "பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி" என்கிற அவதாரங்களோபாதி பரப்புப் போருங்காணும் இவ்வவதாரத்தில் இவளைப் பெறுகைக்குப் பண்ணின ப்ரவ்ருத்திகளும் அவனுக்கு. ஆச்ரித வாத்ஸல்ய கார்யமான முனிவிறே.

விளக்கம் – (கண்ணபிரானுக்கென் பெண்மை தோற்றேன்) - விரோதிகளை அழித்தமை குறித்துக் கூறியதைத் தொடர்ந்து "பெண்மை தோற்றேன்" என்று கூறியதன் கருத்து என்னவென்றால், "விரோதிகளாக உள்ளதால் அழிப்பதற்குத் தகுதியான சகடம் போன்றவற்றை அழித்தான். அழியாமல் உள்ளதான எனது பெண்மையையும் அழித்தான்" என்பதாகும். எதன் மூலம் அழித்தான் என்பதைக் கூறுகிறாள்; தனது வலிமையால் அவற்றை அழித்தான்; தனது மென்மை, அதாவது ஸௌளப்யத்தால் இவளை அழித்தான். இவளுக்கு அவன் செய்த உபகாரம் என்ன? (பிரானுக்கு) - அவற்றின் கைகளில் அகப்படாமல் தப்பித்துத் தன்னை இவளுக்குத் தந்தான்; இந்த உபகாரத்திற்கு இவள் தன்னையே எழுதிக் கொடுத்தாள். எஜமானனாகிய தன்னை உண்டாக்கி, என்னை அடிமைத்தனத்தின் எல்லையில் நிறுத்தினான். பல விரோதிகளை அழித்தான் என்று கூறியதன் கருத்து, கீதையில் (4-5) - பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி - எனக்குப் பல பிறவிகள் கழிந்தன - என்பதற்கு ஏற்ப பல அவதாரங்கள் போன்று, இந்த அவதாரத்தில் இவன் செய்த பல செயல்களும் இவளைப் பெறுவதற்காகவே ஆகும் என்பது போன்றே இருந்தன. ஆனால் அவனுடைய சீற்றத்திற்கு இவள் ஈடுபடுவாளோ என்பதற்கு விடை தருகிறாள்; அடியார்களிடம் கொண்ட வாத்ஸல்யம் கார்யமாகவே இந்தச் சீற்றம் ஏற்படுகிறது அல்லவோ?

வ்யாக்யானம் - (கண்ணபிரானுக்கு என் பெண்மை தோற்றேன்) "அதோஸ்மி லோகே வேதேச ப்ரதித: புருஷோத்தம:" என்றும், "ஜாநாதி புருஷோத்தமம்" என்றுஞ் சொல்லுகிற தன்னுடைய பும்ஸ்த்வத்தைக் காட்டிக்காணும் இவளுடைய ஸத்ரீத்வத்தை யபஹரித்தது! (பெண்மை தோற்றேன்) தோலாதது தோற்றேன். (முனிந்தினியித்யாதி) இனி மீட்கலாமென்றே நினைக்கிறது? மீட்க நினைக்கிற நீங்கள் அவனுடைய அபதாநங்களுக்கு முன்னேயன்றே மீட்கப் பார்ப்பது?

விளக்கம் - (கண்ணபிரானுக்கு என் பெண்மை தோற்றேன்) - கீதை (15-18) - அதோஸ்மி லோகே வேதேச ப்ரதித: புருஷோத்தம: - ஸ்ம்ருதியிலும் வேதத்திலும் புருஷர்களில் உத்தமன் என்று கூறப்படுகிறேன் - என்றும், கீதை (15-19) - ஜாநாதி புருஷோத்தமம் - யார் என்னைப் புருஷர்களில் உத்தமன் என்று தெளிந்து கொள்கிறானோ - என்றும் கூறுவதற்கு ஏற்ப உள்ள தனது ஆண் தன்மையைக் காண்பித்து அல்லவோ இவளுடைய பெண்மைத்தன்மையை அபகரித்தான்! (பெண்மை தோற்றேன்) - ஆனால் இவள் தனது நிறம் போன்ற பலவற்றையும் இழந்துள்ளபோது, "பெண்மை தோற்றேன்" என்று மட்டுமே ஏன் கூறவேண்டும் என்பதற்கு விடை கூறுகிறாள்; இதுவரை எதனைத் தோற்கவில்லையோ அதனையே தோற்றேன். (முனிந்தினியித்யாதி) - இனியும் என்னை மீட்கலாம் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? இவ்விதம் என்னை மீட்க எண்ணும் நீங்கள், அவனுடைய வெற்றிச்செயல்களுக்கு முன்பாக அல்லவோ மீட்க எண்ணுகிறீர்கள்?

வ்யாக்யானம் - (என் செய்தீர்) எனக்கு அநுகூலைகளானீரல்லீர்; மீட்கத் தொடங்கினது தலைக்கட்டிற்றன்று. (அன்னைமீர்காள்) ஜந்ம ப்ரப்ருதி என் ப்ரக்ருதியறிந்து போருகிற நீங்கள் மீட்கப் பார்ப்பதே! அவன் பண்ணின உபகாரங்களை யறியாமையிறே நீங்கள் பொடிகிறது. "அவன் பண்ணின வுபகாரம் மறக்கவொண்ணாதாகில் நினைக்கிறாய். பெற்று வளர்த்த எங்களுடைய உபகாரமும் நினைக்க வேணுங்காண்!" என்ன, (முன்னியவன் வந்து வீற்றிருந்த) உபகாரத்தில் முற்பாடன் அவன் காணுங்கோள். (முன்னி) முற்பாடனாய் நின்று. "பூர்வஜ" என்னும்படியே; என்னைப் பெறுகைக்கு அவஸரப்ரதீக்ஷனாய்க் கொண்டு தன் வேறுபாடு தோற்றவிருக்கிற.

விளக்கம் - (என் செய்தீர்) - எனக்கு ஏற்பவர்களாக இருந்து நீங்கள் மீட்க எண்ணவில்லை; இதன் விளைவாகவே உங்களுடைய இந்த மீட்புச் செயலானது நிறைவேறவில்லை. (அன்னைமீர்காள்) - நான் பிறந்தது முதலாக எனது இயல்பை நன்கு அறிந்த நீங்கள் என்னை மீட்க எண்ணுகிறீர்கள்! அவன் செய்த உபகாரங்கள் எதனையும் நீங்கள் அறியாத காரணத்தால்தான், இவ்விதம் கோபம்

கொள்கிறீர்கள். இதனைக் கேட்ட தாய்மார்கள், “அவன் செய்த உபகாரங்களை மறக்கக்கூடாது என்பதால், அவற்றையும் அவனையும் நீ நினைத்தபடி உள்ளாய். ஆயினும் பெற்று வளர்த்த எங்களுடைய இத்தகைய உபகாரங்களையும் நீ எண்ணவேண்டும் அல்லவோ?”, என்றனர். இதற்கு இவள் விடை தருகிறாள்; (முன்னியவன் வந்து வீற்றிருந்த) – உபகாரம் செய்ததில் அவனே முதலில் செய்தவன் ஆகிறான். (முன்னி) - முன்பாகவே செய்து; இதற்கு ப்ரமாணம் ஜிதந்தேயில் - பூர்வஜ: - முன்பே உண்டானவனே – என்பதாகும். அதாவது, என்னைப் பெறுவதற்குரிய காலத்தை எதிர்நோக்கியபடி, தனக்கு உங்கள் மேன்மைகள் அனைத்தையும் வெளிப்படுத்தும்படியாக வீற்றுள்ளான்.

வ்யாக்யானம் - (கனிந்தபொழிலித்யாதி) கொண்டு புக்குக் காட்டுவார் தாழ்வே; அங்குள்ளதெல்லாம் பக்வ பலமாயிருக்கும். கனிந்த மரம் கண்டால் “அஸுராவேசமுண்டு” என்று அஞ்சவேண்டாத சோலை. (காலம் பெறவென்னைக் காட்டுமினோ) இக்குடிக்கும் எனக்கும் பரிஹாரமொன்றேயிறே. பின்னையும் என்னையங்கே கொண்டு போய்ப் பரிஹரிக்கை தவிரிகோள்; நானுளேனானபோதே அத்தைச் செய்யப் பாருங்கோள். பின்னை கதே ஜலே ஸேதுபந்தமாகாமே, நான் ஜீவிக்கும் எல்லையிலே காட்டுங்கோள்.

விளக்கம் – (கனிந்தபொழிலித்யாதி) - அங்கு என்னைக் கொண்டு சென்று காண்பிப்பவர்கள் உண்டாக்கும் காலதாமதம் மட்டுமே உள்ளது; இவன் என்னை எதிர்பார்த்தபடியே உள்ளான். அங்குள்ள அனைத்தும் பக்குவமாகக் கனிந்து நிற்கும். “கனிந்த பொழில்” என்பதால் “கனிந்த விளா” என்று எண்ணி, அதில் அஸுரர்களுடைய ஏறிடுதல் உண்டோ என்று எண்ணி அஞ்சவேண்டாதபடி உள்ள சோலை; அதாவது, தான் மிகவும் விருப்பத்துடன் எழுந்தருளியுள்ள இடம் என்பதால் விரோதிகள் யாரும் இல்லை. (காலம் பெறவென்னைக் காட்டுமினோ) - இவளை அவர்கள் அங்கு அழைத்துச் சென்று காண்பித்தல் என்பது உறுதியானால் அல்லவோ “காலம் பெற என்னைக் காட்டுமின்" என்று கூறுதல் பொருத்தமாகும் என்பதற்கு விடை தருகிறாள்; உங்களுடைய இந்தக் குலத்திற்கும் எனக்கும் ஏற்ற பரிஹாரம் இந்த ஒன்று மட்டும் அல்லவோ? அதாவது, இவளுடைய உயிர் தரிப்பினால் மட்டுமே தாங்கள் உயிர் தாங்கும்படியாக உள்ள குலம். ஆகவே என்னை அங்கு கொண்டு சென்று சேர்ப்பதில் தவற வேண்டாம். நான் “உள்ளேன்” என்பதாக உள்ளபோதே என்னை அங்கு கொண்டு சேர்க்கும் செயலைச் செய்ய முயல்வீராக. “தண்ணீர் முழுவதும் ஓய்ந்த பின்னர் அணை கட்டலாம்” என்று

எண்ணியபடி இருக்காமல், நான் உயிருடன் உள்ளபோதே என்னைக் கொண்டு சென்று காண்பிப்பீர்களாக.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ஸ்வாமி பெரியாழ்வார் அருளிச் செய்த

பெரியாழ்வார் திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை அருளிச் செய்த
ஸ்வாபதேச வ்யாக்யானம் (மூலம் மட்டும்) மற்றும்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் அருளிச் செய்த
வ்யாக்யானம் (மூலமும், எளிய தமிழ்நடையும்)
(பகுதி – 23)

1-2-17. பருவம் நிரம்பாமே * பார் எல்லாம் உய்யத் *
திருவின் வடிவு ஒக்கும் * தேவகி பெற்ற **
உருவு கரிய * ஒளி மணி வண்ணன் *
புருவம் இருந்த ஆ காணீரே *
பூண் முலையீர் வந்து காணீரே

பொருள் – பருவம் அடைவதற்கு முன்னமே, அதாவது தொட்டிலில் கிடக்கும் பருவத்திலேயே, உலகங்கள் எல்லாம் நல்வழியில் செல்ல, பெரியபிராட்டியாரின் இயல்பினைத் துல்லியமாக உடைய தேவகிப்பிராட்டி நோன்பு இருந்து பெற்ற பிள்ளையும், ரூபத்தில் கருமையானவனும், ஒளி மின்னுவதுமான நீலமணி போன்ற வடிவினைக் கொண்டவனும் ஆகிய க்ருஷ்ணனின் திருப்புருவங்களின் அழகினைக் காணுங்கள், ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட முலைகளை உடைய பெண்களே நீங்கள் வந்து காணுங்கள்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேச அவதாரிகை - திருக்கண்களில் நின்றும் திருப்புருவத்தில் பெருகுகிறார்.

திருவாய்மொழிப்பிள்ளை ஸ்வாபதேசம் - (பருவமித்யாதி) திருவின் வடிவொக்கும் தேவகி, பருவம் நிரம்பி ரக்ஷகனாகாதிருக்கச் செய்தேயும் பாரெல்லாம்

உஜ்ஜீவிப்பிப்பதாக நோற்றுப் பெற்ற. (உருவுகரிய வித்யாதி) மிக்க ப்ரகாசத்தையுடைய நீலரத்தம்போலே யிருக்கிற திருமேனியையுடைய க்ருஷ்ணனுடைய திருப்புருவங்களில் அழகைக் காணீரென்கிறார். கீழ் "அமுதன்ன தேவகி" என்றத்தை "திருவின் வடிவொக்கும் தேவகி" என்று சாப்தமாக வருளிச்செய்கிறார். திருவின் வடிவொக்குகையாவது வைதர்ம்யத்தில் ஏகதேச த்ருஷ்டாந்தம். "பூண்முலை" என்றது ப்ரகாசகமான ஆத்மபூஷணம்; அதாவது பராவரகுருக்கள் ப்ரகாசிப்பித்ததிறே.

மாமுனிகள் வ்யாக்யான அவதாரிகை - திருக்கண்களினழகை யநுபவித்த வநந்தரம் திருப்புருவத்தினழகை அநுபவிக்கிறார்.

விளக்கம் – திருக்கண்களின் அழகினை அனுபவித்த பின்னர் திருப்புருவத்தின் அழகினை அனுபவிக்கிறார்.

மாமுனிகள் வ்யாக்யானம் - (பருவமித்யாதி) சக்ரவர்த்தித் திருமகனைப்போலே பருவம் நிரம்பின பின்பு விரோதிகளை நிரஸித்து லோகத்தை உஜ்ஜீவிப்பிக்கையன்றிக்கே, பருவம் நிரம்புவதுக்கு முன்னே "திண் கொளசுரரைத் தேய" வளருகையாலே லோகமெல்லாம் உஜ்ஜீவிக்கும்படியாக, பூதநா சகட யமளார்ஜுநாதிகளைத் தொட்டில் பருவமே பிடித்திறே நிரஹித்துச் சென்றது. (திருவின் வடிவொக்கும் தேவகி பெற்ற) லக்ஷ்மீ துல்ய ஸ்வபாவையான தேவகிப்பிராட்டி இப்படிக்கீடாக நோற்றுப் பெற்ற. திருவின் வடிவொக்கு மென்கையாலே கீழ் "உள்ளமுதன்ன தேவகி" என்றது இங்கே ஸ்பஷ்டமாயிற்றதிறே. (உருவித்யாதி) ரூபத்தால் கரியதாய் உஜ்ஜ்வலமாயிருந்துள்ள மணி போன்ற வடிவையுடையவனுடைய. (புருவமித்யாதி) மத நன் கருப்புச்சிலை போலேயிருக்கிற திருப்புருவங்களினழகைக் காணுங்கோள். ஆபரணாலங்க்ருதமான முலையையுடைய நீங்கள் வந்து காணுங்கோள்.

விளக்கம் – (பருவம் இத்யாதி) - பருவம் நிரம்பிய பின்பு, அஸுரர்களை அழித்து உலகத்தை தர்ம வழியில் நடத்தும் சக்ரவர்த்தித் திருருமகனான இராமனைப் போன்று அல்லாது, பருவம் நிரம்புவதற்கு முன்னமே பெரியாழ்வார் திருமொழி (1-2-16) - திண் கொள் அசுரரைத் தேய – என்பதற்கு ஏற்ப அழிக்க வளர்ந்து, உலகமெல்லாம் தர்ம வழியில் செல்வதற்காக; அதவது, தொட்டில் பருவத்திலேயே பூதனை, சகடன், யமளார்ஜுனன் போன்ற அசுரர்களை அழித்து நன்மை

உண்டாக்க. (திருவின் வடிவு ஒக்கும்) - மஹாலக்ஷ்மியின் துல்லியமான இயல்பைக் கொண்ட தேவகிப்பிராட்டி [(பெரியாழ்வார் 1-2-1) - அசோதைக்குப் போத்தந்த – அசோதையிடம் போகவிட்டு வளர்க்க], நோன்பு இருந்து பெற்ற பிள்ளையானவனும்; "திருவின் வடிவு ஒக்கும்" என்பது பெரியாழ்வார் திருமொழி (1-2-1) - சீதக் கடல் உள் அமுது அன்ன தேவகி" என்பதனை உறுதிபட ஆக்கியது. [அதாவது ,"பரித்ராணாய சாதூணாம் விநாஷாய ச துஷ்க்ருதாம்....ஸம்பவாமி யுகே யுகே" (கீதை 4-8) - அசுரர்களை அழித்து, சாதுக்களைக் காப்பேன் - இதற்காகவே இவ்வுலகில் திருஅவதாரம் பண்ணுவேன் என்று நாரயணன் ஸங்கல்பம் செய்ய வைப்பது மஹாலக்ஷ்மியின் இச்சையாலே என்பது உறுதியாக தெளிவாகிறது] .(உருவித்யாதி) - ரூபத்தில் கருமையானதும், மின்னிப் ப்ரகாசிக்கும் நீல மணி போன்ற வடிவை உடையவனுமான இந்தக் க்ருஷ்ணனுடைய. (புருவம் இத்யாதி) - [காணக்கான] மன்மதனின் கருப்பு வில்லானது ஈர்ப்பது போன்று ஈர்க்கும் திருப்புருவங்களின் அழகைக் காணுங்கள். (பூண்முலை) - ஆத்மாவின் ஆபரணமானதும், க்ருஷ்ணன் தாய்ப்பால் பருகுவதற்காக ஆன ஒளிமிக்க அன்பினை வெளிப்படுத்தும் முலைகளை உடைய நீங்கள் வந்து காணுங்கள்.

ஸ்வாமி பெரியாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

...தொடரும்